24.01.2025

O.S.No.221/2016

பி.வா.சா.3. திருமதி.வீரலெட்சுமி க.பெ.பரமசிவம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 2, 4 பிரதிவாதிகள் தரப்பு 3 ம் சாட்சி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. எனது ஆதார் அடையாள அட்டை அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ.**25** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எனது தந்தை பாண்டியனின் பான் கார்டு (அந்த ஆவணம் வா.சா.ஆ.**26** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**1ம் பிரதிவாதி** குறுக்கு விசாணை

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் ஏற்கனவே இதே தரப்பினர்களுக்கிடையே இதே நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தையின் கையெப்பத்தை உயில் ஆவணத்தில் இருப்பதை உறுதி செய்வதற்காக அந்த வழக்கிலும் சாட்சியம் அளித்துள்ளேன் இந்த வழக்கிலும் அதற்காக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஏற்கனவே சாட்சி சொன்ன வழக்கில் விடுப்பட்ட சாட்சியங்களை நிரப்பும் வகையில் இந்த வழக்கில் சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. ராஜசேகரன் மற்றும் அமலி அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தையின் பான் கார்டு என் வசம் உள்ளதாக நிருபண வாக்குமூலத்தில் நான் எதுவும் சொல்லவில்லை என்பதால் நான் பான்கார்டை தாக்கல் செய்துள்ளேன் என் தந்தையின் கையெப்பம் உள்ள ஆவணத்தை எடுத்து வரசொன்னதால் பான்கார்டை எடுத்து வந்துள்ளேன். 2000 ல் எழுதப்பட்ட உயில் ஆவணம் சம்மந்தமாக அதில் உள்ள சாட்சி கையெப்பம் எனது தந்தையின் கையெப்பம் என்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லும்போது எனது வயது

10 என்றால் சரிதான். என் தந்தை இறந்துபோனதர்க்கு சான்று எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தையின் பான்கார்டை அவர் எப்போது கொடுத்தார் என்றால் அவரது பான்கார்டு எங்கள் வீட்டில் இருந்தது. உயில் ஆவணத்தில் உள்ள சாட்சி கையெப்பம் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தை ராஜசேகரன் எனது தந்தை இறந்து 7 மாதம் கழித்து என்னிடம் காண்பித்தார் நான் அதை பார்த்தேன் அதில் உள்ள கையெப்பம் எனது தந்தை கையெப்பம் தான். அதற்கு முன்பு வரை அந்த உயில் ஆவணத்தை பற்றியோ அதில் எனது தந்தை சாட்சி கையெப்பம் இட்டதாகவோ எனது தந்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜசேகரன் அழைத்ததன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல**.**

**3** ம் பிரதிவாதி தரப்பி ல் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்**.**

<u>வாதிதரப்பு குறுக்கு விசாரணை</u>

நிருபண வாக்குமூலத்தை யார் தயார் செய்தது என்றால் எனக்கு தெரிந்ததை நான் சொன்னேன் அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. எனது தந்தை 04.07.2023 ல் இறந்துபோனார். அந்த சங்கதியை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தந்தையின் இறப்பு சான்றிதழோ வாரிசு சான்றிதழோ இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2, 4 பிரதிவாதிகள் எனது தந்தை இறந்து 7 மாதம் கழித்து என்னை வந்து பார்த்தார்கள். என்னிடம் உயிலை காண்பித்து அதில் எனது தந்தையின் கையெப்பம் இருக்கிறதா என்று பார்க்க சொன்னார்கள். நான் பார்த்து எனது தந்தையின் கையெப்பத்தை உறுதி செய்தேன். அந்த உயில் ஆவணத்தில் உள்ள கையெப்பம் எனது தந்தையின் கையெப்பம் என்று காண்பிப்பதற்கு அவரது கையெப்பம் உடைய வேறு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பான் கார்டு தாக்கல் செய்துள்ளேன். 2, 4 பிரதிவாதிகள் 2015 ஆம் ஆண்டு பின்னிட்டு மோசடியாக ஒரு உயிலை தயார் செய்து எனது தந்தையிடம் சாட்சி கையெப்பம் வாங்கியுள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் 2,

4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது சாட்சியம் ஏற்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.